**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.523/2017**

**NAME** : சந்தீப்
**FATHER NAME** :
**VILLAGE** :
**TALUK** :
**CALLING** :
**RELIGION** :
**AGE** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 29.07.2022.**

குறுக்கு விசாரணை

நான் தற்போது பெங்களூரில் வசிக்கிறேன். என்னுடைய ஆதார் கார்டு பெங்களூர் முகவரியில் உள்ளது. நான் மனுவில் கூறியுள்ள முகவரியில்தான் முதலில் வசித்தேன். 2010 முதல் 2011 வரை அங்கு வசித்தேன். நான் தான் காரை ஓட்டிச்சென்றேன். என்னுடைய கார் நெம்பர் கே.ஏ.02 எம்.இ.1150 மாருதி ஷிப்ட். மற்றொரு வாகன நெம்பர். டி.என்.72 ஏடி. 0707 மாருதி டிசைனர். திருவண்ணாமலை டு வேலூர் ரோட்டில் திருவண்ணாமலைக்கு 5 கீ.மீ. தள்ளி விபத்து நடந்தது. முதல் தகவல் அறிக்கையில் நான் தான் குற்றவாளி என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்திற்கு சென்றேன். அந்த முதல் தகவல் அறிக்கை Quash ஆகிவிட்டதா என்றாலும் அந்த உத்தரவு தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் சிபிசிஐடிக்கு அனுப்பினார்கள் அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. நான் தவறாக முதல் தகவல் அறிக்கை Quash ஆகிவிட்டதாக சொல்லுக்கிறேன் என்றால் முதல் தகவல் அறிக்கை Quash ஆகவில்லை. கிரிமினல் கோர்ட்டில் என்னை விடுதலை செய்துவிட்டார்கள். அந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தாயாருக்கு விபத்து சமயத்தில் 73 வயது. 73 வயதிலும் என் தாயார் திடகாத்திரமாக இருந்தார் என்பதற்கு போட்டோ மற்றும் சி.டி. தாக்கல் செய்துள்ளேன். இதை போட்டோ எடுத்த நபரை கொண்டு தான் குறியீடு செய்ய முடியும் என்றால் சரியல்ல. என் தாயாரின் வருமானத்தை காட்ட ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அம்மா மத்திய அரசாங்கத்தில் வேலை பார்த்தார், ம.த.சா.ஆ.12 தாக்கல் செய்துள்ளேன். இந்த ம.த.சா.ஆ.12 ஜெராக்ஸ் என்றால் சரிதான். இதை அந்த ஆவணத்தை கொடுத்தவர்கள் மூலமாக தான் குறியீடு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு ரூ.15 லட்சம் மருத்துவ செலவு செய்து இருக்கிறோம். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் காண்சால்டிங் பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு தலையில் ஆப்ரேஷன் செய்தார்கள். என்

அம்மா வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு சேர்க்கப்பட்டு, அதற்கு பின்பு சென்னை அப்போலா மருத்துவமனைக்கும், பின்னர் பெங்களுர் மருத்துவமனைக்கும் அழைத்து செல்லப்பட்டு ஒரு மாதம் சிகிச்சை செய்யப்பட்டார். நான் சிஎம்சி மருத்துவமனையில் இருந்து என் அம்மாவை டிஸ்சார்ஜ் செய்த போது கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரியையும் அப்போலா மருத்துவமனையில் கொடுத்த டிசசார்ஜ் சம்மரியும் மற்றும் கோலம்பியா ஏசியா மருத்துமனையில் கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரியும் தாக்கல் செய்யவில்லை. அதை பார்த்ததால்தான் எந்தவிதமான காயம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதை அறியமுடியும் என்றால் சரியல்ல. நான் வண்டியை அஜாக்கிரத்தையாகவும், கவன இன்மையாலும் வண்டியை ஓட்டியதால்தான் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வண்டியின் காப்பீட்டுயாளரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வகையில் என்னுடைய மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை அதிகமானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள், சர்ஜரி மற்றும் ஆப்ரேஷன் செய்தற்கான பில்கள் இல்லை என்றாலும் அவை அனைத்தும் மருந்து வாங்கியதற்கான பில்கள் ஆக உள்ளன என்றாலும் சரியல்ல. நான் மருத்துவ பில்களை போடப்படும் போது ப்ரிகிரிப்சனையும் சேர்ந்து தான் போடவேண்டும் என்றால் மருத்துவமனையில் சேக்கப்பட்டு சிகிச்சை பெறும்போது ப்ரிகிரிப்சன் கொடுப்பது கிடையாது. நான் கான்சால்ட்டிங் பில்கள் போட்டால் தான் அந்த பில்களின் உண்மை தன்மை குறித்து அறிய முடியும் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு செலவு செய்தது சம்மந்தமாக நான் எந்த இன்சூரன்சில் இருந்தும் பணம் வாங்கவில்லை. கார் டேமாஜ் ஆனது சம்மந்தமாக மொத்தமாக தொகை இன்சூரன்சில் இருந்து வாங்கிவிட்டேன் அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் மீது தான் வழக்கு போடப்பட்ட காரணத்தினாலும், என்னுடைய அஜாக்கிரத்தையால் விபத்து நடந்த காரணத்தினாலும், எனக்கு இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.